வெளியீடு—கூ

# மரபுத்தொடர் அகரவரிசை

## (IDIOMS & PHRASES)

இடம் நோக்கி
மரபுத்தொடரமைத்துப்
பேசவும் எழுதவுங்
கற்பிப்பது

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்
சென்னை

பதிவு செய்யப்பட்டது] [விலை அணா 3

வெளியீடு: கூ

ஓம்

# மரபுத்தொடர் அகரவரிசை

## (Idioms & Phrases)

◙

இடநோக்கி மரபுத்தொடர் அமைத்துப் பொருள்சிறக்கப்
பேசவும் எழுதவுங் கற்பிப்பது

◙

தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்
: : சென்னை - 1. : :
ஜூலை, 1960

பதிவு செய்யப்பட்டது] விலை காசு 25

## முன்னுரை

நம் முன்னோர் பொருட்பொலிவுமிக்க அருந்தொடர் மொழிகளைப் பேச்சிலும், நூலிலும் பரக்க வழங்கிவந்திருக்கின்றார்கள். அங்ஙனம் அச் சொற்களை வழங்கி வந்த முறையே மரபாகும். அம்மரபு தவறி வழங்கினால் அது வழுவாகும்.

இம் மரபுத்தொடர்களைத் திரட்டி இதுகாறும் யாரும் தனி நூலாக வெளியிட்டதாகத் தெரியவில்லை. ஆங்கில மொழி கற்கப் புகுவார்க்கு உதவியாகப் பழமொழிகள், உவமைகள், மரபுமொழிகள் போன்ற கருவி நூல்கள் பல வெளிவந்திருக்கின்றன. அங்ஙனந் தமிழ்மொழி பயில்வார்க்கும் உதவியாதற்பொருட்டு, முன்னர்ப் பழமொழி, உவமை அகரவரிசைகளை வெளியிட்டு அவற்றின் தொடர்பாக இந்நூலை வெளியிடுகின்றோம். இதன்கண் ஏறக்குறைய ஓராயிரத்தைம்பது மரபுத்தொடர்களும், ஒலிக்குறிப்பாகிய தொடர்மொழிகளும் அடங்கியுள்ளன. இவற்றைக்கொண்டு நம் பண்டைய தமிழ்ச்சான்றோர்களின் அறிவும் ஆற்றலும் எத்துணைப் பெருமைவாய்ந்தவை யென்பதை உய்த்துணரல் எளிதாகும.

தமிழிற் சொற்பொழிவு ஆற்றுவார்க்கும், திருந்திய உரைச்செய்யுள், பாச்செய்யுள் இயற்றுவார்க்கும் இந்நூல் பெரிதும் பயன்படும்.

இக் கழகத்தார் வெளியிட்டுள்ள ஏனைய நூல்களைப் போல மிகவும் எளிய விலைக்குக் கிடைக்கப்பெறும் இந்நூற்படிகளையும், பள்ளிக்கூட ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களை வாங்குமாறு தூண்டியும், தமிழ்ச்செல்வர்கள் நூற்றுக்கணக்காக வாங்கித் தமிழ்மக்கட்கு விலையின்றி வழங்கியும் எம் தமிழ்த்தொண்டைச் சிறக்கச் செய்யுமாறு அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

**தமிழ்ப் பாதுகாப்புக் கழகத்தார்.**

உ

# மரபுத்தொடர் அகரவரிசை

அகடவிகடம் - தந்திரம், தட்டு மாற்று.
அகலக்கால் வைத்தல் - அளவு (வரை) கடந்துபோதல்
அக்கரைப் பச்சை (தூரத்துப் பச்சை) - பொய்த்தோற்றம்
அக்குத் தொக்கு - ஒட்டுப்பற்று, தொடர்பு
அடங்காப் பிடாரி - எவர்க்கும் அடங்காதவன் (ள்)
அடாடி படாடி - பெருங்குழப்பம்
அடாதுடி - தீம்பு, தீச்செயல்
அடாபிடி - கொடுஞ்செயல்
அடிக்கொருகால் - அடிக்கடி
அடிச்சான் பிடிச்சான் வியாபாரம் - மேல்விழுந்து செய்யுங் கொடுஞ் செய்கை
அடிதடி, அடிபிடி - சண்டை
அடிதண்டம் பிடிதண்டம் - முழுமையாக வசப்பட்ட பொருள்
அடியடியாக - தலைமுறை தலைமுறையாக
அடுக்கடுக்காய் - வரிசை வரிசையாக
அடுக்குக் குலையல் - நிலையழிதல்
அண்டப் புரட்டன் - பெருந்தீயன்
அமளி பண்ணுதல் - சச்சரவு உண்டாக்குதல்
அமுது குத்துதல் - உறைமோர் பாலில் ஊற்றுதல்
அரங்கேற்றுதல் - புது நூல், நடனம் முதலியவற்றை முதன்முறை அவையில் ஏற்கச் செய்தல்
அரட்டல் புரட்டல் - நோய் முற்றலால் நிகழும் வலி
அரிப்பரித்தல் - கொழித் தெடுத்தல்
அரைகுலையத் தலைகுலைய - மிக்க விரைவாய்
அரைகுறை - முற்றுப் பெறாமை
அரைப்படிப்பு - நிரம்பாக் கல்வி
அரைமனிதன் - மதிப்புக் குறைந்தவன்
அலக்கலக்காய், அலகலகாக - தனித்தனியாய்
அலக்கழித்தல், அலைக்கழித்தல் - அலைத்து வருத்துதல், கெடுத்தல்
அலைகுலையாக்குதல் - நிலை குலையச் செய்தல்
அல்லுச் சில்லுப்படுதல் - சிறிது சிறிதாகக் கெடுதல்
அல்லும் பகலும் - இரவும் பகலும்
அல்லோல கல்லோலம் - ஆரவாரம்
அவசரக் குடுக்கை - பதற்றக்காரன்
அவிழ்த்துக்கொடுத்தல் - சொந்தப் பொருளிலிருந்து எடுத்துக் கொடுத்தல்

அழித்தழித்து - திரும்பத் திரும்ப, மீண்டும் மீண்டும்

அழிவழக்கு - வீண் வழக்கு

அழுகள்ளன் தொழுகள்ளன் - பாசாங்கு செய்வோன்

அழுமூஞ்சி - பொலிவற்ற முகமுள்ளவன்

அளப்பளத்தல் - அலப்புதல், முறுமுறுத்தல்

அளப்பறிதல் - உட்கருத்தைத் தந்திரமாயறிதல்

அளவளாவுதல்-கலந்து பேசுதல்

அளவு படுத்துதல் - வரையறை செய்தல்

அள்ளாடித் தள்ளாடி - தளர்ந்த நடையாய்

அள்ளிக்கொட்டுதல் - மிகச் சம்பாதித்தல் (தேடுதல்)

அள்ளித் துள்ளுதல் - மிகச் செருக்குதல்

அள்ளியிறைத்தல் - அளவுக்கு மிஞ்சிச் செலவிடுதல்

அள்ளிவிடுதல் - ஏராளமாகக் கொடுத்தல்

அறக்கப்பறக்க - விழுந்து விழுந்து, விரைவாக

அறம்பாடுதல் - தீச்சொற்பட்டுத் தீப்பயனுண்டாகப் பாடுதல்

அறிதுயில் - யோக நித்திரை

அறிமுகம்-தெரிந்தமுகம், பழக்கம்

அறிவறிவாக - விளக்கமாக, தீர

அறுதியிடுதல் - முடிவுக்குக் கொண்டுவருதல், தீர்மானித்தல்

அறுத்துக் கட்டுதல் - தாலி நீங்கிய பின் மறுதாலி கட்டி மணத்தல்

அறுப்புச் சுகம் - விதவைக்குக் கொடுக்கும் பொருள்

அறைகூவுதல் - போருக்கழைத்தல்

அறைமுறை யிடுதல் - குறை தெரிவித்தல்

அற்றுப்போதல் - முழுதும் ஒழிதல், இடைமுறிதல்

ஆக்கங் கூறுதல் - ஆசி கூறுதல், வாழ்த்துதல்

ஆசாரக் கள்ளன் - ஒழுக்கமுள்ளவன்போல் நடிக்குங் கள்ளன்

ஆசை வார்த்தை - நம்பிக்கையுண்டாகச் சொல்லுஞ்சொல்

ஆடைக்குங் கோடைக்கும் - எல்லாப் பருவகாலத்தும்

ஆட்கொள்ளுதல் - அடிமை கொள்ளுதல்

ஆணிக் கொள்ளுதல் - இருப்பிடத்தை நிலைபெறச் செய்து கொள்ளுதல்

ஆணித்தரம் - முதற்றரம்

ஆர்ப்பாட்டம் - ஆரவாரம்

ஆலாப்பறத்தல் - திண்டாடுதல்

ஆவிச் சேர்த்தல் - கட்டியணைத்தல்

ஆழம் பார்த்தல் - ஒருவனறிவு முதலியவற்றை ஆராய்தல்

ஆழும் பாழுமாய் - சீர்கேடாய், வீணாக

ஆறப்போடுதல்-காலந்தாழ்த்தல்

ஆறல் பீறல் - பயனற்றது

ஆற வமர - அமைதியாய்

ஆற்றமாட்டாமை - முடியாமை, தாங்க முடியாமை

ஆற்றறுத்தல் - இடையிற் கைவிடுதல்

ஆற்றுப்படுத்தல் - வழிச்செலுத்துதல்

இசகு பிசகு, இசக்குப் பிசகு - முறை கேடு

இசை கேடு - சீர்கெட்ட நிலை



இசைவு கேடு - பொருத்தமின்மை, காரியக்கேடு

இடக்கரடக்கல் - சொல்லத்தகாத சொல்லைத் திரித்து வேறுவகையாய்ச் சொல்லுமுறை

இடக்கு முடக்கு - சங்கடம்

இடங்கெட்ட பாவி - சீரழிந்தவன்

இடங்கெட்ட பேச்சு - ஒழுங்கற்ற சொல்

இடங்கேடு - வறுமை, தாறுமாறு

இடங்கொடுத்தல் - கண்டிப்பின்றி நடக்க விடுதல், பிடிகொடுத்தல்

இடம்படுதல் - விசாலித்தல்

இடம் பண்ணுதல் - உணவு வழிபாடுகட்கு இடத்தைத் துப்புரவு செய்தல்

இடித் துரைத்தல் - வற்புறுத்திக் கூறுதல், அழுத்திச்சொல்லுதல்

இடுக்குப்பிள்ளை-கைக்குழந்தை

இடுக்கு முடுக்கு - மூலைமுடுக்கு

இடுமருந்து - வசியமருந்து

இடைக்கிடை - ஊடே ஊடே

இடைக்கொள்ளை - ஊடுதட்டு

இடைச்சுவர் - இடையூறு

இடைத்தட்டு-இடைகொள்ளை

இடைதெரிந்து - செவ்வியறிந்து

இடைவிடாமல் - எப்போதும்

இடை வெட்டிலே - தற்செயலாய்

இட்டுக் கட்டுதல் - இல்லாததை ஏற்றிச் சொல்லுதல்

இமை பொருந்துதல் - தூக்கம் அடைதல், உறங்குதல்

இரட்டுற மொழிதல் - இருபொருள்படப் பேசுதல்

இரண்டறக் கலத்தல் - முத்தியடைதல்

இரண்டில் மூன்றில் - இரண்டு மூன்று நாட்களுக்கொருதரம்

இரண்டுங்கெட்ட நேரம்-மாலைப் பொழுது, அந்திப்பொழுது

இரண்டுங் கெட்டான் - நன்மை தீமை அறியாதவன்

இரண்டு நினைத்தல் - கெடுதி நினைத்தல்

இரண்டு படுதல் - பிரிவு படுதல், ஐயுறுதல்

இரண்டெட்டில் - விரைவில்

இருதலைக்கொள்ளி - எப்பக்கத்துந் துன்பஞ் செய்வது

இருதலை மணியன் - குறளை சொல்வோன்

இருவல் நொருவல் - இடிந்தும் இடியாதுமுள்ள அரிசி முதலியன, நன்றாக மெல்லப்படாத உணவு

இல்லாததும் பொல்லாததும் - பொய்யும் தீங்கு விளைப்பதும்

இலம்படுதல் - வறுமை யடைதல்

இலைமறைகாய் - மறைபொருள்

இழவுக்கடித்தல் - வீணுக்கு முயலுதல்

இழவு கொடுத்தல் - துன்பங் கொடுத்தல்

இழுக்கடித்தல்-அலையவைத்தல்

இழுத்துப் பறித்தல் - வலிந்து கொள்ளுதல், போராடுதல்

இழுத்து விடுதல் - நீட்டித்து விடுதல், வெளிப்படுத்தல், புதிதாய் உண்டாக்குதல்

இழுப்புப் பறிப்பாதல் - போராட்டமாதல், போதியதும் போதாததுமாதல்

இளநாக்கடித்தல் - உடன்படாததுபோற் காட்டுதல்

இளிச்சவாய்ப் பட்டம் - ஒன்றுந் தெரியாதவன் என்ற பட்டம்

இனிப்புக் காட்டுதல் - அவா உண்டாக்குதல்

இன்னாரினியார் - பகைவரும் நண்பரும்

இன்னாரினையார் - இத் தன்மையுடையவர்

ஈ ஆடவில்லை (முகத்தில்) - மிகுந்த கவலையாய்

ஈட்டுக்கீடு - சரிக்குச்சரி

ஈடுகட்டுதல் - பிணைகொடுத்தல்

ஈடேறுதல் - உய்வடைதல்

ஈரொட்டு - உறுதியின்மை

ஈவிரக்கம் - மனக்கசிவு

ஈவுசோர்வு - சமயாசமயம்

உச்சிகுளிர்தல்-மகிழ்வடைதல்

உச்சுக் கொட்டுதல் - வெறுப்புக் குறி காட்டுதல்

உடம் பெடுத்தல் - பிறத்தல், செயலுடையனாதல்

உடன்கையில் - உடனே

உடன்போக்கு - பெற்றோரறியாமல் தலைவி தலைவனுடன் செல்கை

உடனுக்குடனே - அப்போதைக்கப்போது

உடனொத்தவன் - சமமானவன்

உடும்பு நாக்கன் - வஞ்சகன்

உடுமாற்று - உடைமாற்றுகை, நடைபாவாடை

உடைப்பிற் போடுதல் - அகலத் தள்ளுதல்

உடைப்பெடுத்தல் - வெள்ளத்தாற் கரையழிதல்

உட்கிடக்கை - உட்கருத்து

உட்புகுதல் - உள்ளே செல்லுதல், ஆழ்ந்து கவனித்தல்

உண்டாயிருத்தல் - சூல்கொண்டிருத்தல்

உண்டியற்புரட்டு - பணமோசம்

உதப்பிவாயன் - எச்சில் தெறிக்கப் பேசுவோன்

உதவாக்கட்டை - பயனற்றவன்

உதறுகாலி - காலை இழுத்து நடப்பவள்

உப்பில்லாப் பேச்சு - பயனற்ற உரையாடல்

உம் கொட்டுதல் - சம்மதித்தல், ஒப்புக்கொள்ளல்

உயிர்விடுதல் - மிகப்பாடுபடுதல், இறத்தல்

உரித்து வைத்தல் - வெளிப்படுத்தி வைத்தல், நேரொப்பாதல்

உருக்குலைதல் - முன்னுருவம் அழிதல் மேனி மெலிதல்

உருட்டிப் போடுதல் - பேச்சால் மருட்டி வெல்லுதல், அழித்துவிடுதல்

எக்கச் சக்கம், எசகு பிசகு - தாறுமாறு

எடாத வெடுப்பு - தகாத செயல், அரிய செயல்

எடுத்த எடுப்பில் - உடனே

எடுத்தபடி - உடனே, முன்னாயத்தமின்றி

எடுத்துச் சொல்லுதல் - சிறப்பித்துச் சொல்லுதல், அறிவு கூறுதல்

எடுத்துப் போடுதல் - நீக்குதல், திடுக்கிடச் செய்தல்

எடுத்தெறிதல்-அலட்சியம் பண்ணுதல், மதிப்பின்றி நடத்தல்

எடுப்பெடுத்தல் - அரியதை முயலுதல்

எடுப்பார் கைப்பிள்ளை - யாவருக்கும் வசப்படக்கூடியவன், சூதறியாதவன்



எட்டுக் கண் விட்டெறிதல் - எங்குந் தன் அதிகாரஞ் செல்லுதல்

எட்டிற் பத்தில்-இடையிடையே

எய்ப்பில் வைப்பு - இளைத்த காலத்தில் உதவுவதற்காக எடுத்து வைக்கும் பொருள்

எழுத்தெண்ணிப் படித்தல்-ஒன்றும் விடாது படித்தல்

எள்ளளவும் - சிறிதளவும்

ஏக்கன் போக்கன், ஏக்கி போக்கி - ஒன்றுக்கு முதவாதவன்

ஏச்சுக் காட்டுதல் - பழிப்பைச் சுட்டிக்காட்டிப் பேசுதல்

ஏடாகூடம் - தாறுமாறு

ஏட்டிக்குப்போட்டி - விதண்டாவாதம்

ஏட்டுச் சுரைக்காய் - அனுபவத்தோடு கூடாத கல்வியறிவு

ஏட்டுப்படிப்பு - உலகப் பழக்கமில்லாத கல்வியறிவு

ஏணல்கோணல்-ஒழுங்கின்மை

ஏணுக்குக் கோண் - எதிரிடையான பேச்சு

ஏதுங்கெட்டவன்-பயனற்றவன்

ஏப்பை சாப்பை - பயனற்றது

ஏய்ப்புக் காட்டுதல்-நயவஞ்சகஞ் செய்தல்

ஏழைக் குறும்பு - பேதைபோலக் காட்டிச் செய்யுங் குறும்பு

ஏறக்கட்டுதல் - உயரக் கட்டுதல், அடியோடு நிறுத்தல்

ஏற இறங்கப் பார்த்தல்-மேலுங் கீழும் பார்த்தல்

ஏற வாங்குதல் - விலகியிருத்தல், முழுதும் விலைக்குப் பெறுதல்

ஏற்றக் குறைச்சல், ஏற்றத் தாழ்ச்சி - உயர்வு தாழ்வு

ஏற்றத் தாழ்வு - பெருமை சிறுமை

ஏனென்னுதல் - ஆபத்துக்குதவ வினவுதல்

ஐது நொய்தாக-மிக்க இலேசாக

ஒட்டப் போடுதல் - தன்னைத் தானே பட்டினி போடுதல்

ஒட்டிக் கிரட்டி - ஒன்றுக்கு இரண்டு பங்கு

ஒட்டிக் கொடுத்தல் - உறுதி பண்ணித் தருதல்

ஒட்டு மொத்தம் - முழு மொத்தம்

ஒட்டுவா ரொட்டி - ஒட்டுநோய், தொற்று நோய்

ஒதுக்குப் பொதுக்குப் பண்ணுதல் - பொருளை மோசஞ்செய்தல், சொத்தை மறைத்து வைத்தல்

ஒத்துப் பாடுதல்-ஆமோதித்தல், ஏற்றுக்கொள்ளுதல்

ஒத்துழைத்தல் - பலரோடு உளமொத்து உழைத்தல்

ஒத்துக்கொடுத்தல் - பொறுப்பேற்றல், கணக்குகட்கு வகை சொல்லுதல்

ஒருகாலில் நிற்றல் - விடாப்பிடியாய் நிற்றல்

ஒருகைபார்த்தல் - வெல்ல முயலுதல்

ஒருகையா யிருத்தல் - எதிர்க்கட்சிக்குப் பகைமையாய் ஒற்றுமையோடிருத்தல்

ஒருசொல் வாசகன் - சொற்பிறழாதவன்

ஒருதலை - ஒரு சார்பு

ஒருநாளைக் கொருநாள் - நாள் செல்லச் செல்ல

ஒருபோக்காய்ப்போதல் - திரும்பி வாராது போதல்
ஒருமடை செய்தல் - ஒரு முகமாக்குதல்
ஒருமுகமாய்ப் பேசுதல் - எல்லாரும் ஒரேபடியாய்ப் பேசுதல்
ஒருவழிப்படுதல் - ஒற்றுமைப்படுதல்
ஒளி மறைவு - இரகசியம், அருமறை
ஒன்றரைக் கண்ணன் - ஒரு பக்கஞ் சரிந்த பார்வையாளன்
ஒன்றுக்குமற்றவன் - பயனற்றவன்
ஒன்று கூடுதல்-ஒன்றாய்ச் சேர்த்தல், ஒற்றுமைப் படுதல்
ஒன்றுக் கொத்தையாதல்-அரை குறையாதல்
ஒன்று மற்றவன் - வறிஞன்
ஒன்று பாதி - ஏறக்குறையப் பாதி
ஓட வைத்தல் - உறுதிப்படுத்தல், புடமிடுதல்
ஓடியாடிப் பார்த்தல் - பெரு முயற்சி எடுத்தல்
ஓட்டை சாட்டை-பயனற்றது
ஓட்டையுடைசல் - சிதைந்த பண்டங்கள்
ஓட்டை வாயன் - மறையினை வெளியிடுபவன்
ஓட்டங் காட்டுதல் - ஓடுவது போல் நடித்தல்
ஓட்டம் பிடித்தல்-தப்பி ஓடுதல்
ஓட்டாண்டி - இரந்து உண்போன்
ஓட்டைக் கை - பெருஞ் செலவாளி
ஓய்ச்ச லொழிச்ச லில்லாமை - சிறிதும் ஒழிவில்லாமை
ஓய்வொழிச்சல்- இளைப்பாறுகை
ஓரடிக்கோரடி - அடிக்கடி

கக்கட்ட மிடுதல் - சிரிப்பில் உரத்த சத்தமிடுதல்
க்க்கல் கரிசல் - கலங்கல் நீர்
கக்கலும் விக்கலுமாய் - கதிர் ஈன்றதும் ஈனாததுமாய்
கக்கவைத்தல் - நெருக்கி வாங்குதல்
கங்குகரையில்லாமை - அளவின்மை
கங்கணங்கட்டுதல் - ஒரு செயலை முடிக்க முனைந்து நிற்றல்
கசகசத்தல் - வியர்த்தல்
கசகரணம் போடுதல் - பெரு முயற்சி செய்தல்
கசாகூளம் - குப்பை
கச்சங்கட்டுதல், கச்சை கட்டுதல் - ஒரு செயலை முடிக்க வரிந்து கட்டி நிற்றல்
கச்சந்தி யவிழ்த்தல் - பொய் மூட்டை யவிழ்த்தல்
கடன்கட்டாய்ப் பேசுதல் - கடுமையாகப் பேசுதல்
கடன் கழித்தல் - மனமின்றிச் செய்தல்
கடுக்காய் கொடுத்தல் - ஏமாற்றி விடுதல்
கடைகட்டுதல் - காரியத்தை நிறுத்திவிடுதல், கடையை மூடுதல்
கடைகெடுதல் - மிக இழிவடைதல்
கடைத்தேறுதல்-ஈடேறுதல்
கடைவிரித்தல் - பலர்முன் தன் ஞற்றலைச் சொல்லுதல்
கடுமுடுக்கு - விரைவு நடை
கட்சிகட்டுதல் - ஒன்றன் பொருட்டு முரணிநிற்றல்
கட்டளைக்கல் - உரைகல்
கட்டிச் சுருட்டுதல் - பொருளைச் சுருட்டிக் கட்டுதல், கடையைக் கட்டுதல்



கட்டா கட்டி - விடாத்தன்மை, விடாப்பிடி
கட்டிவருதல் - ஊதியங் கூடி வருதல்
கட்டிவிடுதல் - பொய்ச்செய்தி உண்டாக்குதல்
கட்டுக்கதை - பொய்க்கதை
கட்டுக்கிடை-நாட்பட்ட சரக்கு
கட்டுக் கோப்பு - புனைந்துரை, மேற்கூரை
கட்டுங் காவலுமாதல் - பெருங் காவலுடையதாதல்
கட்டுடைதல், கட்டுவிடுதல் - உடல்தளர்தல்
கட்டுப்படி - பொருட்கேடில்லாமல் ஒரு சிறிது ஊதியத்துடன் அமைகை
கட்டுமுட்டு - அமைதி, உடற்கட்டு
கட்டுரைத்தல் - உறுதியாகச் சொல்லுதல்
கட்டையவிழ்த்தல் - பொய் கூறத் தொடங்குதல்
கணக்கு வழக்கு - முறைமை, அலுவல், கொடுக்கல் வாங்கல்
கண்காட்டி விடுதல் - சாடையாய் ஏவிவிடுதல்
கண்கொள்ளாக் காட்சி - வியத்தற்குரிய தோற்றம்
கண்டதும் கடியதும்-நல்லதும் தீயதும்
கண்ட துண்டம் - பலதுண்டம்
கண்டமட்டும் - மிகுதியாய்
கண்டாலு முண்டானும் - வீட்டுத் தட்டுமுட்டுக்கள்
கண்டுங் காணமை - போதியதும் போதாததுமாகை
கண்டுமுதல் - அடித்து முதலான தானியம்



கண்ணயிருத்தல் - விழிப்பாயிருத்தல், அருமையாயிருத்தல்
கண்ணுக்குக் கண்ணதல்-மிகப் பாராட்டப்படுதல், அந்தரங்கமாயிருத்தல்
கண்ணுங் கருத்துமாய் - முழுக் கவனிப்புடன்
கண்ணெடுத்துப் பார்த்தல் - அருள் செய்தல்
கண்ணக் காட்டுதல் - கண் சாடை காட்டுதல்
கண்ணோடுதல் - இரங்குதல், மேற்பார்வை பார்த்தல்
கண்பிதுங்குதல் - வேலைமிகுதியால் வருத்தமிகுதல்
கண்மூடித்தனம் - கவனமின்மை
கண்வளர்தல் - தூங்குதல்
கண்விழிப்பு - சாக்கிரதை
கதைகட்டுதல் - பொய்ச்செய்தி கிளப்புதல்
கதைபண்ணுதல் - கட்டிப்பேசுதல்
கதைவளர்த்தல் - பேச்சை விரித்தல்
கத்தி முனையாதல் - மிகக் கண்டிப்பா யிருத்தல்
கந்தல்கூளம் - தாறுமாறு
கம்பளிப் பேச்சு - வீண் பேச்சு
கம்பி நீட்டுதல் - ஓடிவிடுதல்
கயிறு கட்டிவிடுதல், கயிறு திரித்தல் - பொய்ச் செய்தி உண்டாக்கி விடுதல்
கரிபூசுதல் - மானங்குலைத்தல்
கரடு முரடு ஒழுங்கின்மை
கரை ஏறுதல் - உய்வடைதல், ஈடேறுதல், வளர்க்கப்படுதல்
கரைகடத்தல் - எல்லைமீறுதல்
கருக்கழிதல் - புதுமைகுலைதல், கூர் மழுங்குதல்
கருவறுத்தல்-நிர்மூலமாக்குதல்

கரை கண்டவன் - நன்கு பழகி அறிந்தவன்
கரைத்துக்குடித்தல் - முற்றக் கற்றறிதல்
கரைதலைப்பாடம், கடைதலைப் பாடம் - தலைகீழாகப் பாடம் பண்ணுகை
கரைப்படுதல் - கரைசேர்தல், உய்வடைதல், சேரவேண்டிய இடஞ்சேர்தல்
கரைபுரளுதல் - மிகுதல்
கலகலப்பு - ஒலிக்கை, கலந்து பழகுகை, உற்சாகமுடைமை
கல்லில் நாருரித்தல் - இல்லாத பொருளைப் பெற முயலுதல்
கவைக்குதவாத - பயனற்ற
கழித்துக் கட்டுதல் - இகழ்ந்து ஒதுக்குதல், போக்குச் சொல்லி நெகிழவிடுதல்
கழுத்தறுத்தல் - பெருந்துன்பத்துக்கு உள்ளாக்குதல்
கழுத்திற் கட்டுதல் - வற்புறுத்திப் பொறுப்பாளியாக்குதல்
கழுத்துக் கொடுத்தல் - தன் வருத்தம் பாராமல் பிறர் காரியத்தைத் தான் ஏற்றுநிற்றல், வாழ்க்கைப்படுதல்
களை வாங்குதல்-அழகுகுறைதல்
கள்ளேடு விடுதல் - அறைகுறையாக வேலைசெய்தல்
கறந்த மேனியாய்-வேறு கலப்பின்றிச் சுத்தமாக
கற்போடுதல் - காரியத்தைக் கெடுத்தல்
கன்னங்கரிய-மிகக்கருமையான
காக்கான் போக்கான் - ஊர் பெயர் தெரியாதவன்
காட்டிக் கொடுத்தல் - கற்றுக் கொடுத்தல், தன் பக்கத் தானை எதிரியின் வயமாக்குதல்
காதறை கூதறை - ஒழுக்கங் கெட்டவள்
காதுகுத்துதல் - வஞ்சித்தல்
காரியப் பைத்தியம் - பயன் கருதிப் பித்தன்போல் நடப்பது
காலங்கண்டவர் - வயதிலும் அநுபவத்திலும் முதிர்ந்தவர்
காலமல்லாக் காலம் - அகாலம்
காலில் விழுதல் - மன்னிப்புக் கேட்டல்
காலோடி கையோடி - தொழிலற்றுத் திரிபவன்
காறுபாறு - கவனிப்பு
காற்றாய்ப்பறத்தல் - விரைவு, சுருசுருப்பு
கிடுகிடாய்த்தல் - நடுநடுங்குதல்
கிடுகிடுத்தல் - பல்லோடு பல் கொட்டுதல்
கிடைச் சரக்கு - நாட்பட்ட சரக்கு
கிட்டமுட்ட - ஏறக்குறைய
கிளப்பி விடுதல் - தூண்டி விடுதல், நீக்குதல்
கிள்ளிக்காட்டுதல் - குறிப்புக் காட்டுதல்
கிள்ளுக்கீரை - மிகவும் எளியது
கிள்ளுங் கிழியுமாய் - பயனற்றதாய்
கிறுகிறுத்தல் - மயக்கமாதல், தடுமாறுதல்
கீல் கீலாய் - சந்து சந்தாய்
கீழ் நோக்குதல்-தாழ்ந்த நிலைக்குப் போதல்
குடிமுழுகிப் போதல்- முற்றும் அழிதல்
குடுகுடுப்பு - பரபரப்பு
குட்டிச்சுவர்-பழுது, பாழ்மனை
குண்டக்கமண்டக்கம்- சுருண்டு கிடக்கும் நிலை



குண்டுங் குழியுமாய் - மேடும் பள்ளமுமாய்
குதுகுதுப்பு - குளிரால் நடுங்குகை
குத்துக்கு நிற்றல் - வாதாடுதல்
குத்துமதிப்பாய் - சுமாராய்
குமிழ் குமிழ்தல் - பிறர்க்குத் தோன்றாமல் மறைத்தல்
குமுகுமுத்தல் - மணம் வீசுதல்
கும்பிடுகள்ளன்-வணக்கங்காட்டும் வஞ்சகன்
குரங்குப்பிடி - பிடிவாதம்
குருட்டுப் பாடம் - பொருள் தெரியாமல் நெட்டுருச் செய்கை
குழைச்சான் கொட்டுக் கொட்டுதல் - அடிமைபோல் வணக்க வொடுக்கமாய் நடத்தல்
குழையடித்தல் - ஆளை வசப்படுத்தல்
குள்ளம் பாய்தல் - தந்திரமாயிருத்தல்
குறிகெட்டவன்-நெறியற்றவன்
குறிப்பாய்ப் பார்த்தல் - கவனமாக உற்றுப்பார்த்தல்
குறுக்கிடுதல் - பிறர் காரியத்தில் தலையிடுதல்
குறுக்கு நெடுக்கும், குறுக்கு மறுக்கும் - இங்கு மங்கும்
குறுக்கே மடக்குதல் - இடையிற் பேசி வாயடக்குதல்
குறுவிழி விழித்தல் - சினம் பயம் முதலியவற்றால் வெறுத்துப் பார்த்தல்
குறை குடம் - கல்வி கேள்விகளால் நிரம்பாதவன்
கூடுவிடுதல்-இளைத்தல், இறத்தல்
கூட்டாட்டம்-பொது மக்கள் கூடும் நிலைமை
கூட்டாஞ் சோறு - பல காய்கறிகள் சேர்த்துப் பொங்கிய சோறு
கூட்டி வைத்தல்-வேண்டுவன புரிந்து நலஞ் செய்தல்
கூட்டுமூட்டு - பலருங் கூடுகை, பழிப்புரை
கூட்டோடு - அடியோடு
கூர்வாங்குதல் - கருவியைக் கூர்மையாக்குதல்
கூழைக்கும்பிடு - போலி (வஞ்சக) வணக்கம்
கூழைக்குறும்பு - பிறர் அறியாமற் செய்யுந் தீமையான செய்கை
கூழைப் பார்வை - வஞ்சகப் பார்வை
கூறிட்டு மொழிதல் - வினைகளுக்கேற்பப் பகுத்துக் கூறும் விடை
கூறை கோட்படுதல் - ஆடையைப் பறிகொடுத்தல்
கேசாதிபாதம்-முடிமுதல் அடிவரை
கேளல் கேளிர் - பகையும் நட்புமில்லாத அயலார்
கைகழுவுதல் - பொறுப்பை நீக்கிக்கொள்ளுதல்
கை காணுதல் - அனுபவித்தல்
கைகூடுதல் - சித்தியடைதல்
கைகொடுத்தல்-உதவி செய்தல்
கைக்குதவல் - சமயத்துக்குதவல்
கைச்சரக்கு - கற்பனையாகக் கூறும் சொல்
கைதட்டிப் போடுதல் - நீக்கிவிடுதல்
கை தலைவைத்தல் - பெருந்துன்பமடைதல்
கைதவறுதல் - தொலைந்து போதல், இறத்தல்

கை நனைத்தல் – பிறர் வீட்டில் விருந்துண்ணல்
கை நீட்டுதல் - திருடுதல்
கை நோட்டம் - கையால் அளவிடும் மதிப்பு
கை பார்த்தல் - உதவி நாடுதல், பழுது பார்த்தல், நாடி பார்த்தல், இரேகை பார்த்தல்
கை பார்த்து உண்ணுதல்–பிறர் கை பார்த்து உண்டு வாழ்தல்
கை பிடித்தல் – மணம் புரிதல்
கை போதல் – முற்றும் வல்லவனுதல்
கைப்பாடுபடுதல் - அரும்பாடுபடுதல்
கைப்பிடியாய்ப் பிடித்தல் – களவுங் கையுமாய்ப் பிடித்தல்
கைமாட்டாதார் - வேலைசெய்ய இயலாதவர்
கைமாறாட்டம் – கைத்தவறு
கைமாற்று – கைக்கடன்
கைமுடக்கம்-பண முட்டுப்பாடு
கைமேல் - உடன் கையில்
கைம்மிகுதல் – அளவு கடத்தல்
கையடக்கம் - மீத்து வைக்கும் பொருள்
கையடித்தல் – உறுதி தருதல்
கையடிப்படுதல் – ஒரு பொருள் பலர் கை கடத்தல்
கையமர்த்துதல் - அடக்கியாளுதல்
கையறுதல் – செயலற்றுப் போதல், அளவு கடத்தல், இறத்தல்
கையுரள் – குற்றேவல் செய்வோன்
கையாலாகாதவன் - வேலை செய்யத் திறமையற்றவன்
கை யிளைத்தல் – செல்வ நிலை குன்றுதல்

கையுங்களவும் – கையும் மெய்யுமாய்
கையைக் கடித்தல் – பொருள் நட்டமாதல்
கை யொழியாமை - முயற்சி நீங்காமை
கையோடு கையாய் - காரியத்தோடு காரியமாய்
கையோட்டம் – செல்வநிலை
கையோலை செய்தல் - தீர்மானித்தல்
கொஞ்ச நஞ்சம் – சிறிதளவு
கொடிகட்டி நிற்றல் – உறுதிப்பாட்டுடன் முயற்சியை மேற்கொள்ளுதல்
கொடிகட்டி வாழ்தல் - மிகுந்த செல்வவாழ்க்கையிலிருத்தல்
கொடிமுடிந்த வழக்கு – தீராத சிக்கலான வழக்கு
கொடி விடுதல் - மிகுதியாதல்
கொடு கொடுத்தல்-நடுங்குதல், அவசரப்படுதல்
கொடுக்கல் வாங்கல்-கொடுத்து வாங்கிச் செய்யும் வணிகம் முதலியவை
கொடுக்குக் கட்டி நிற்றல் – விடாப்பிடியா யிருத்தல், ஊக்கமாயிருத்தல்
கொடுக்குப் பிடித்தல்–ஒருவனை விடாது பின் தொடர்ந்து திரிதல்
கொடுத்து வைத்தல்-பொருளை நம்பி வைத்தல், நல்வினை பெற்றிருத்தல்
கொடுநாக் கெறிதல் - ஒன்றை விரும்பி நாவால் வாய்ப்புறத்தைத் துழாவுதல்
கொட்டமடித்தல்–மனம்போன படி குறும்பு செய்தல்
கொட்டிக் கொடுத்தல் - மிகுதியாய்க் கொடுத்தல்



கொட்டை போடுதல் - விதை விளைத்தல், தொழில் முதலியவற்றில் பழக்கப்படுதல்
கொண்டான் கொடுத்தான்–சம்பந்தஞ் செய்தோர்
கொண்டு செலுத்தல் – இறுதி வரை நடத்துதல், கொடுக்கல் வாங்கல் செய்தல்
கொத்துங் குறையுமாய்–அரை குறையாய்
கொம்மை கொட்டுதல் – தட்டியழைத்தல், முதுகைத் தட்டிக் கொடுத்தல்
கொழு கொம்பு - பற்றுக்கோடு
கொள்முதல் – வாங்கின விலை
கொள்வனை கொடுப்பனை– பெண்ணைக் கொடுத்துப் பெண்ணை வாங்கும் திருமணத் தொடர்பு
கொள்ளா கொள்ளை – மிகுதி
கொள்ளாக்கொள்ளி–தணியாத உண்டிவிருப்ப முள்ளவள்
கொள்ளி சொருகுதல் (வைத்தல்) - கேடு செய்தல், தீ வைத்தல்
கோகு தட்டுதல் - ஆரவாரஞ் செய்தல்
கோடானு கோடி – பல கோடி
கோட்டி கொள்ளுதல் – அவையிற் பேசுதல்
கோணல் மாணல் – தாறுமாறு
கோபுரந்தாங்கி - காரியப் பொறுப்பாளியாக நடிப்போன்
கோமாளிக் கூத்து – நகைப்பு விளைக்குஞ் செயல்
கோயிற் பெருச்சாளி–கோயிற் சொத்தை மறைவாகக் கொள்பவன்
கோலக்காரன் – கேலிக்காரன்

கோலங் காணுதல் – துன்பத்திற்கு உள்ளாக்குதல்
கோலாகலம் - கூக்குரல் ஆடம்பரம்
கோலாகலம் பண்ணுதல்-ஒழுங்கீனமாய் நடத்தல்
கௌளிக் கட்டாய்ச் சொல்லுதல் - குறி சொல்லி ஏமாற்றுதல்
சகட்டடியாக – மொத்தமாக
சக்கரஞ் சுற்றுதல் - பெரிதும் துன்புறுத்தல்
சக்கைவாங்கு வாங்குதல்–மிகக் கடிந்து பேசுதல்
சடைவாறுதல்-இளைப்பாறுதல்
சடை விழுதல் - பயன்படாது போதல்
சட்ட திட்டம் – சட்ட ஒழுங்கு
சட்டந்தட்டுதல் - புனுகு வழித்தல்
சட்டி எடுத்தல் – இரத்தல்
சட்டை பண்ணுதல்-பொருள் படுத்துதல்
சண்டை பிடித்தல் – கடிந்து கூறுதல்
சதசதப்பு – ஈரப்பற்று
சந்தியில் இழுத்தல்-பழிப்பிற்கிடமாக்குதல்
சந்தியில் நிற்றல் - ஆதரவின்றி இருத்தல்
சந்து சொல்லுதல்-தூதராகிச் செய்தியறிவித்தல்
சந்து பொந்து – மூலை முடுக்கு, பொந்து புடைகள்
சப்பாணி கொட்டுதல் – கை சேர்த்துக் கொட்டுதல்
சப்பைக் கட்டுக் கட்டுதல்–குற்றங் குறைகளைத் தாங்கிப் பேசுதல்
சரக்கவிழ்த்தல் – பொய்யான செய்திகளைக் கூறுதல்

சரடு திரித்துக் கூறுதல் - ஒன்றைப் பொய்யாகக் கற்பித்துக் கூறுதல், தந்திரமாகத் தீயன செய்யத் தூண்டுதல்
சரடு விடுதல்-பிறர் வழியாகத் தன் கருத்தை வெளியிடுதல்
சரமாரியாய் - இடைவிடாமல்
சரிக்கட்டுதல் - ஈடுசெய்தல், கடனைத் தீர்த்தல், இணக்கமாய்ச் செய்தல்
சரிக்குச்சரி-பதிலுக்குப் பதில், பழிக்குப் பழி
சரி வர - முழுதும்
சர்க்கரைப் பேச்சு - இனிமை காட்டுஞ் சொல்
சல்லோபில்லோ வென்றிருத்தல்-சங்கோசமின்றிப் பழகுதல்
சள்ளுப்படுதல் - தொந்தரவுக்குள்ளாதல்
சாங்கோபாங்கமாய் - முழுதும்
சாயல் மாயலாய்-சாடைமாடையாய்
சாலமாலம் - வஞ்சகம்
சிக்கல் பிக்கல் - தாறுமாறு, முட்டுப் பாடு
சிங்கியடித்தல் - வறுமையால் வாடுதல்
சிட்டாய்ப் பறத்தல் - சிட்டுக் குருவி போல விரைந்தோடிப் போதல்
சித்திரைச் சுழியன்-குறும்பன்
சிம்பல் சிலும்பல் - கந்தை
சிரித்த பிழைப்பு - ஏளனஞ் செய்யத்தக்க வாழ்க்கை
சிரிப்பாணிப் படுதல்-சிறுமைப் படுதல்
சிரிப்பாய்ச் சிரித்தல்-இகழ்தல், மலிந்து கிடத்தல், நிலைகெட்டுத் திரிதல்
சிலிர் சிலிர்த்தல் - உடல் புளகித்தல்
சில்லந் தட்டிப் போதல் - வறுமைக்கு உட்படுதல்
சிறகு கட்டிப் பறத்தல்- விரைந்து செல்லுதல்
சிறப்புச் செய்தல் - விழாக் கொண்டாடுதல், உபசரித்தல்
சிறிதுரைத்தல்-இகழ்ந்து பேசுதல்
சின்னபின்னம், சின்னு பின்னம் - கண்ட துண்டம்
சீட்டுக் கொடுத்தல் - வேலையினின்றும் விலக்கல்
சீட்டு நாட்டு - கூட்டுச் சீட்டு முதலியன
சீறுமாறு - தாறுமாறு
சுக்காஞ் செட்டி - கடுஞ்செட்டுள்ளவன்
சுக்குச் சுக்காய் - துண்டு துண்டாய்
சுட்டி சுட்டியாக - வட்டவட்டமாக
சுரித்த மூஞ்சி - வெறுப்பைக் காட்டும் முகம்
சுருக்கிப் பிடித்தல் - செலவு முதலியன குறைத்தல்
சுருக்குக் கொடுத்தல்-கண்டிப்புக் காட்டுதல்
சுருக்குப் போட்டுக்கொள்ளுதல் - தற்கொலை புரிந்து கொள்ளுதல்
சுருள வாட்டுதல் - வருந்த வேலை வாங்குதல்
சுவடியைக் கட்டுதல் - பேச்சை நிறுத்தல்,படிப்பை நிறுத்தல்
சுழலமாடுதல்-ஒன்றைப் பெறுதற்கு இடைவிடாது முயலுதல், வஞ்சகமாகக் கொள்ளுதல்



சுழற்றியடித்தல் - சுழன்று வீசுதல், கொள்ளைநோய் வருதல்
சுழித்து வாங்குதல் - சுழற்றி உள்ளிழுத்தல்
சுழியிலெழுத்து - தலைவிதி
சுற்றிப் பிடித்தல் - வயிறு மிகவும் நோதல், பற்றிக்கொள்ளுதல்
சுற்றுக்கா விடுதல் - விடாது பற்றித் தொடர்தல்
சுற்றுஞ் சுழற்றுமாய்-நேரின்றி வளைந்து
சுற்று முற்றும் - நான்கு பக்கமும்
சுற்று வட்டகை (வட்டாரம்) - சுற்றுப்புறத்துக் கிராமங்கள்
சூடங் கெட்டுப் போதல் - நிலை கெட்டு முடிவடைதல்
சூடுகாட்டுதல் - கடுமைக்குறி காட்டுதல்
சூழ்போதல் - ஆராய்தல்
சூளுறுதல் - ஆணையிடுதல்
சூறையாடுதல் - கொள்ளையடித்தல்
செக்கடி முண்டன் - வெறுந் தடியன்
செட்டுப் பொட்டாதல் - வணிகஞ் சிதைத்தல்
செய்நேர்த்தி - சரியான போஷணை, சிறந்த சாகுபடி
செலவு கொடுத்தல் - உத்தரவு கொடுத்தல், நட்டமிறுத்தல்
சேகண்டி யடித்தல்-வீண் பேச்சுப் பேசிக் காலங்கழித்தல், பலரறியக் கூடுதல்
சேர் கொடுத்தல் - காட்டிக் கொடுத்தல்
சேறுஞ் சுரியுமாய் - குழைவாய்
சையத்திருத்தல் - நன்னிலையிலிருத்தல்
சையொத்திருத்தல் - இணக்கமாயிருத்தல்
சொடக்கெடுத்தல் - நெட்டி வாங்குதல்
சொட்டைச் சொல் - பழி வார்த்தை
சொட்டுப் போடுதல் - குறை கூறுதல், தவறுதல்
சொல்லாத சொல் - தகாத சொல்
சொல்லாமற் சொல்லுதல் - குறிப்பாகச் சொல்லுதல்
சொல்லிக் காட்டுதல் -குத்திக் காட்டுதல், பாடம் ஒப்பித்தல்
சொல்லிக்கொள்ளுதல் - விடைபெறுதல், தாங்கிப் பேசுதல், இறந்து போதல்
சொல்லிவைத்தல் - முன்னறிவித்தல், கற்பித்தல்
சொல் வளர்த்தல்-செய்தியைப் பலருமறியச் செய்தல்
சொறிந்துகொடுத்தல் - தூண்டுதல்
தகப்பன்சாமி - அடங்காப் பையன்
தக்கடி வித்தை - ஏமாற்று
தங்குதடை - தடுமாற்றம்
தடங்கோலுதல் - வழிசெய்தல்
தடபுடல் - ஆடம்பரம்
தடி போடுதல் - இடையூறு செய்தல்
தடிமாடு - கொழுத்தவன்
தடுத்தாட் கொள்ளுதல் - திருத்தி வசமாக்குதல்
தட்டல் தடவல் - முட்டுப்பாடு
தட்டழிதல் - நிலை குலைதல், தோல்வியுறுதல்
தட்டிக்கழித்தல்-சாக்குப்போக்குச் சொல்லுதல்
தட்டிக்கேட்டல் - கண்டித்தல்

தட்டிக்கொடுத்தல்-தூண்டுதல், உற்சாகப்படுத்துதல்
தட்டிச் சொல்லுதல் - மறுத்துரைத்தல்
தட்டிப் பறித்தல் - அடித்துப் பிடுங்குதல்
தட்டிப் பார்த்தல் - மறையறிய முயலுதல்
தட்டிப்போடுதல் - மறுத்தல்
தட்டியழைத்தல் - போருக்கழைத்தல்
தட்டிவிடுதல் - ஊக்கப்படுத்துதல், தப்புதல்
தட்டுக்கெடுதல் - வறுமையால் நிலைகெடுதல்
தட்டுண்டு போதல் - தடைப்படுதல்
தட்டுத் தடங்கல், தட்டுத்தடை, தட்டுப்படுதல் - தடுமாற்றம்
தட்டுப் பறத்தல் - திடீரென்று மறைதல்
தட்டுமாறி - ஏமாற்றுபவன்
தட்டுமானம் - தந்திரவழி
தட்டுமுட்டு - வீட்டுச் சாமான்
தண்டத்துக் கழுதல் - ஒன்றை ஒரு பயனுமின்றிச் செய்தல்
தண்டு மிண்டு - மூர்க்கத்தனம்
தண்டு வலித்தல் - படகுத் துடுப்புத் தள்ளுதல்
தண்ணீர் காட்டுதல் - ஏமாற்றுதல், அலைக்கழித்தல்
தந்தனப் பாட்டுப்பாடுதல் - ஏழைபோல் நடித்தல்
தந்திதந்தியாய் - வரிசை வரிசையாய்
தப்பித்தவறி - தவறுதலாய்
தலை காட்டுதல் - பலருமறிய வெளிவருதல்
தலைகீழாய் நிற்றல் - மிகச் செருக்குக் கொள்ளுதல்
தலைக்கை தருதல் - கையால் தழுவி அன்பு காட்டுதல்
தலைசாய்த்தல் - கீழே படுத்தல்
தலை தடுமாற்றம்-பெருங் குழப்பம்
தலைதெறிக்க (ஓடுதல்) - பொறி கலங்கும்படி
தலைத்தலை - ஒவ்வொருவரும், இடந்தோறும்
தலைப்பாமாறி - பெரு மோசக்காரன்
தலைமடங்குதல் - கீழ்ப்படிதல்
தலைமுழுகுதல் - சம்பந்தம் ஒழித்தல், கைவிடுதல்
தலைமுறை தத்துவமாய் - பரம்பரை பரம்பரையாய்
தலைமேற் கொள்ளுதல் - பொறுப்பை ஏற்றல்
தலையாட்டிப் பொம்மை - எதற்கும் இணங்கி நடப்பவன்
தலையிடுதல் - காரணமின்றிப் பிறர் காரியத்திற் புகுதல்
தலையெடுத்தல் - மேனிலைக்கு வருதல்
தவழ வாங்குதல் - மிகுதியான வேலை வாங்கி வாட்டுதல்
தவிடு பொடியாதல் - பொடிப் பொடியாதல்
தழுதழுத்தல் - நாக்குழறுதல்
தளர்ந்து கொடுத்தல்-இணங்குதல்
தள்ளி வைத்தல் - நாளொற்றி வைத்தல், விலக்கி வைத்தல்
தறுக்கணித்தல் - நிலைத்தல், பழங் கன்றிப்போதல்
தன்னைக் கட்டுதல் - போதியதாதல், செட்டாக நடத்துதல், தன்வயப்படுத்தல்
தன்னந்தனி-முற்றுந் தனிமையாய்



தாக்குப் பொறுத்தவன்-உடல் வலிமையுள்ளவன், பெரிய குடித்தனக்காரன்
தாங்கித் தடுக்கிடுதல் - மிகுந்த உபசாரஞ் செய்தல்
தாட்டுப் பண்ணுதல் - காலங் கடத்துதல், மறுத்தல்
தாண்டுகாற் போடுதல்-நூலில் இங்கொரு பக்கம் அங்கொரு பக்கமாகப் படித்தல்
தாம்புந் தோண்டியுமாதல்-மிக ஒற்றுமையாதல்
தாம்பூலமாற்றுதல் - திருமணம் உறுதி செய்தல்
தாம்பூலம் பிடித்தல் நயவஞ்சகமாய்க் கெடுதி செய்யப் பார்த்தல்
தாம்பூலம் வைத்தல்-மறைவை வெளியாக்குதல், அழைத்தல்
தாரை வார்த்தல் - தொலைத்து விடுதல், தத்தம் பண்ணுதல்
தார்தாராய்-துண்டு துண்டாக
தார்ப் பாய்ச்சுதல் - மூலைக் கச்சங் கட்டுதல்
தாலி பெருகுதல் - தாலிச்சரடு அற்றிறுகை
தாழ்ந்து கொடுத்தல் - இணங்கிப் போதல்
தாளம் போடுதல்-வறுமையால் துன்புறுதல், விடாது கெஞ்சுதல்
தாளித்துக் கொட்டுதல் - புனைந்து கூறுதல், செருக்கிப் பேசுதல்
தாறுதாறாய்க் கிழித்தல் - சிறு துண்டுகளாகக் கிழித்தல்
தாறுமாறாய்ப் பேசுதல்-பிதற்றுதல், திட்டுதல்
தான்தோன்றி - செருக்குடையவன்
திக்குக் கெடுதல் - திசை தெரியாது மயங்குதல்
திக்கு முக்காடுதல் - மூச்சு முட்டுகை
திசைப்புரட்டன் - பெரும் பொய்யன்
திசையடித்தல் - நல்ல யோகம் அடைதல்
திட்டம் பண்ணுதல் - ஏற்பாடு செய்தல், அமைத்தல்
திட்டவட்டம் - செவ்வை, ஏற்பாடு
திண்டாட்டம் - மனக்கலக்கம்
திண்டுக்குமுண்டு - எதிரிடைப் பேச்சு
தித்திக்கப் பேசுதல் - முகமனுகப் பேசுதல்
தித்திரிப்பு - புனைசுருட்டு
திமிர்பிடித்தல் - கொழுத்தல்
திமில குமிலம் - மகிழ்ச்சிமிகுதி
திமிறியடித்தல் - எதிர்த்துப் பேசுதல்
திராணி செலுத்துதல் - வேலையை நன்கு பார்த்தல், அதிகாரஞ் செலுத்துதல்
திருக்காப்பிடுதல் - கோயிற் கதவு மூடுதல்
திரைத்தவிர்தல் - விட்டு விட்டு ஒளிர்தல்
திரைத்துப் பாடுதல்-திரும்பத் திரும்ப நீட்டிப் பாடுதல்
திருநாடலங்கரித்தல் - நற்கதி அடைதல்
திருப்பூட்டு - மணமகள் தாலி கட்டுகை
திறந்து பேசுதல் - மனத்தை விட்டுச் சொல்லுதல்
திறுதிறுத்தல்-அஞ்சி விழித்தல்
தின்னிமாடன் - மித மிஞ்சித் தின்பவன்

தீட்டிப் பார்த்தல் - கல்வி முதலியவற்றைச் சோதித்தல்
தீரக்கழிய - மிக அதிகமாய்
தீவட்டிக் கொள்ளையடித்தல் - நெறிதவறிப் பொருள் திரட்டுதல்
தீவட்டித் தடியன் - பயனற்ற அறிவிலி
தீவாளியாதல் - கடனால் நிலைகுலைதல்
தீ விழித்தல் - பெருஞ் சினத்துடன் பார்த்தல்
துணி தாண்டுதல் - சத்தியம் செய்தல்
துணிந்து மணியங் கட்டுதல் - பிடிவாதமாயிருத்தல், ஊக்கத்தோடு முயலுதல்
துண்டு துடக்கு-சிறுதுணுக்கு, நீண்டக்கூடாப் பொருள்
துண்டு துணியுமாக - துண்டு துண்டாக
துண்டு விழுதல் - வேண்டிய அளவுக்குமேல் மிச்சப் பகுதி அமைதல், நட்டமாதல்
துப்புக் கெட்டவன்-அறிவற்றவன், அழுக்குப்பிடித்தவன்
துப்புத் துருப்பிடித்தல்-உளவு கண்டுபிடித்தல், விவரமாக விசாரித்தல்
துப்புரவாய் - முழுதும்
தும்பி யூதுதல் - வண்டுபோல ஒலித்தல், ஓசையோடு வலிந்து மூச்சுவாங்குதல்
தும்பு தட்டுதல்-நையப்புடைத்தல்
துரும்பு முறித்துப் போடுதல் - தடை யுண்டாக்குதல், பகையுண்டாக்குதல்
துவசங் கட்டுதல் - எதிராளியாய் நிற்றல்

துள்ளத் துடித்தல் - மிகு துயரால் வருந்துதல்
துறட்டி போடுதல் - மறைபொருளை உசாவி யறிதல் தன்வயப்படுத்த முயலுதல்
துறை காட்டுதல் - வழி காட்டுதல்
துறை போதல் - நிரம்புதல், கற்றுத்தீர்தல், காரியம் முடிவு போதல்
துறை மாறுதல்-வழி தவறுதல்
தூக்கிப் போடுதல் - திடுக்கிடுமாறு செய்தல், சண்டை மூட்டுதல்
தூக்கியடித்தல் - வாங்கச் செய்தல், தோற்கச் செய்தல்
தூங்குமூஞ்சி - மந்தன்
தூண்டிக் காட்டுதல் - விவரித்தல், பிறன் செய்த குற்றத்தை அவனிடம் குத்திக்காட்டுதல்
தூண்டிக் கொடுத்தல் - நினைப்பூட்டுதல், குறிப்பாக அறிவித்தல், கோட் சொல்லுதல், குற்றத்தை வெளியிடுதல்
தூண்டித் துருப் பிடித்தல் - நுணுகி ஆராய்தல்
தூண்டில் போடுதல் - உளவறிதல், தன்வயப்படுத்துதல்
தூர் வாருதல் - கிணற்று வண்டல்களை வாரியெடுத்தல்
தூவிவிடுதல்-செய்தி பரப்புதல்
தூளிமட்டம் - தரைமட்டம்
தூள்படுதல் - தீவிரமாகக் காரியம் நடத்தல்
தூள்படுத்துதல் - முற்றும் அழித்தல், அட்டகாசம் பண்ணுதல்
தெந்தனமடித்தல்-வீணே திரிதல், வேலையை உழப்புதல்
தெப்பலங் கெட்டவன் - பலவீனன், உடல் வலிவற்றவன்



தெம்மாடி - அறிவீனன், ஒன்றுக்கு முதவாதவன்
தெரியத் தெரிதல் - தெளிவாயறிதல்
தெருமருதல்-மனஞ்சுழலுதல்
தெல்லடித்தல்-வஞ்சனை செய்தல்
தெள்ளத்தெளிதல்-மிகத்தெளிவாதல்
தெறிக்கப் பேசுதல் - நிதானமின்றிக் கடுத்துப்பேசுதல்
தெற்றென - விரைவாக, உடனே, தெளிவாக
தென்படுதல் - புலப்படுதல்
தேடியோடித் திரிதல் - பெருமுயற்சி செய்தல்
தேத்தாலடித்தல் - பலவிடத்தும் மலிவாக விற்றல்
தேய்ந்துமாய்ந்து போதல் - கவலையால் உடல் மெலிதல்
தொங்கல் விழுதல் - குறைவாதல்
தொடர்ச்சி பண்ணுதல் - வழக்கிடுதல்
தொடுபிடியாக-இடைவிடாமல்
தொடைதட்டுதல் - சண்டைக் கழைத்தல்
தொட்டகுறை - முற்பிறவியில் தொடங்கி விட்ட வினைக் குறை
தொட்டுத்தொட்டு - சிறுகச் சிறுக
தொண்ணைத்தல் - கெஞ்சி நிற்றல்
தொத்தி ஏறுதல் - அதிகாரம் காட்டுதல், பற்றி ஏறுதல்
தொப்பி போடுதல் - ஏமாற்றுதல், மயக்கிக் கேடு செய்தல்
தொய்யப் போடுதல் - ஒரு பயனுக்காகக் காரியத்தைச் சிறிது தாழ்த்துதல்

தொலைதூரம் - மிக்க தூரம்
தொன்று தொட்டு - அநாதிகாலமாய்
தோப்புக் கரணம் போடுதல் - சொன்னபடியெல்லாம் நடத்தல்
தோள் கொடுத்தல் - உதவி செய்தல்
தோன்றக்கொடுத்தல் - போதுமானபடி கொடுத்தல்
நகையாடுதல் - பரிகசித்தல், சிரித்தல்
நச்சுப் பிச்சு - ஓயாத் தொந்தரவு
நடமாடுதல் - வழங்குதல், பரவி யிருத்தல்
நடுச் சொல்லுதல் - நியாயஞ் சொல்லுதல், சான்றுகூறுதல்
நடுத்தெருவில் விடுதல் - ஆதரவின்றிக் கைவிட்டுப் போதல்
நட்ட நடுப்பெற - நடுமத்தி
நட்டமாய் நிற்றல் - அடங்காதிருத்தல்
நட்டா முட்டி - வஞ்சகம்
நட்டாற்றில் விடுதல்-ஆபத்தில் கைவிடுதல்
நட்டுக்கு நடுவே - நடுமத்தி
நண்டு நசுக்கு-சிறு குழந்தைகள்
நயந்து சொல்லுதல்-வேண்டிக் கொள்ளுதல்
நரிகுளிப்பாட்டுதல் - நயவார்த்தைகளால் ஏமாற்றுதல்
நருக்குப் பிருக்கல்-மசிந்ததும் மசியாததுமான அரைப்பு
நருநாட்டியம் - அளவுக்கு மிஞ்சின சுத்தம்
நருநாட்டியம் பேசுதல்-குற்றத்தையே குறிக்கொண்டு பேசுதல்
நல்லது சொல்லுதல்-அறிவுரை கூறுதல், வழியனுப்புதல்

நழுநழுத்தல் - பிடிகொடாது பேசுதல்

நாக்குத்தவறுதல்-பொய்சொல்லுதல்

நாக்குத் தாளம் போடுதல் - உணவு கொள்ள விரும்புகை

நாக்குத் தெறிக்கப் பேசுதல் - பெரியோரை நிந்தித்தல்

நாக்கு நரம்பற்றவன் - அளவு கடந்து பேசுபவன்

நாக்கு நீளுதல் - அளவுகடந்து பேசுதல்

நாக்குப்புரளுதல்-சொல் தவறுதல்

நாக்கைப் பிடுங்கிக்கொள்ளுதல்-தவறு நடந்ததற்கு மிக்க வருத்தங் காட்டுதல், தன்னுலான முயற்சியை எடுத்துக் கொள்ளுதல்

நாடியைத் தாங்குதல்-இரத்தல்

நாடோடி - ஊர்சுற்றித் திரிபவன், (சாதாரண வழக்கிலுள்ளது)

நாட் செய்தல் - நல்வேளையிற் காரியந் தொடங்குதல்

நாட்டுப்புறத்தான் - பட்டிக் காட்டான்

நாத்தழும்பேறுதல் - பலமுறை சொல்லுதலால் நாவுக்குப் பழக்கமுண்டாதல்

நாவடைத்துப் போதல் - பேச முடியாமற் போதல்

நாளடைவில் - நாள் செல்லச் செல்ல

நாளாவட்டத்தில் - நாளடைவில்

நாளுக்கு நாள் - ஒவ்வொரு நாளும்

நாளோட்டுதல்-தாமதஞ் செய்தல். காலந்தாழ்த்தல்

நாள்தள்ளுதல்-காலங் கழித்தல்

நானுவிதமாய்ப் போதல் - பல வகையாய்ச் சிதறுண்டு போதல்

நிகண்டு பேசுதல் - எல்லாம் தெரிந்தாற்போற் பேசுதல்

நித்திரை தெளிதல்-உறக்கத்தினின்றும் நீங்குதல்

நிமிர்த்தி விடுதல் - நன்ருய்ப் புடைத்தல்

நிலைக்குத்துதல் - இறக்குந் தறுவாயில் விழி முதலியன அசைவின்றி யிருத்தல்

நிலைநாட்டுதல் (நிறுத்தல்) - தாபித்தல், ருசுப்படுத்தல்

நிலையாறுதல் - அமைதியுறுதல்

நிறுத்திப் பார்த்தல் - நிறை சோதித்தல், ஆலோசித்தல், ஒப்பிடுதல்

நின்ருற்போல் - திடீரென்று

நீக்குப்போக்கு - இணக்கமாயிருக்கை, மரியாதை, உதவி

நீச்சு நிலையறிதல் - உள்ள நிலைமையைச் சோதித்தறிதல்

நீட்டு முடக்கில்லாதவன் - ஏழை, உலோபி, குடும்பக் கவலையற்றவன்

நீலம்பற்றவைத்தல்-கதை கட்டுதல்

நீளத்தில் விடுதல்-தாமதித்தல்

நீறுபூத்த நெருப்பு - சினத்தை வெளிக்காட்டாதவன்

நுனிப்புல மேய்தல் - மேலெழுந்த வாரியாகப் படித்தல்

நூல்போதல் - விதவையாதல்

நூறும்புகுதல்-நூறுண்டு வாழ்தல்

நெக்குருகுதல் - இளகுதல்

நெஞ்சு புண்ணுதல் - மனநோதல்



நெஞ்சைப் பிளத்தல் - துக்கம் முதலியன மனத்தை வருத்தல்

நெடுஞ்சாண் கட்டை, நெடுஞ்சாண்கிடை - தண்டாகாரமாய்ப் பூமியிற்கிடக்கை

நெடும் போக்கு-மீளும் நோக்கமில்லாத செலவு

நெட்டுயிர்த்தல் - பெரு மூச்சு விடுதல்

நெட்டுவிடுதல்- நெட்டையாதல்

நெரிநெட்டி வாங்குதல் - நெட்டியை முறித்தல்

நெருக்கிப்பார்த்தல் - வற்புறுத்தல், முயற்சி எடுத்தல்

நெருக்கிப் பிடித்தல் - செட்டால் மிச்சம் பண்ணுதல்

நெல்லிக்காய் மூட்டை - ஒற்றுமையின்மை

நெளிப்புப் பேசுதல் - ஏளனமாகப் பேசுதல்

நெளியெடுத்தல் - கோணல் நீக்குதல்

நெளிவு சுளிவு - ஏற்றத்தாழ்வு

நேரங்கெட்ட நேரம் - தகுதியற்ற காலம்

நேரபாரமறிதல் - அடக்கவொழுக்கமறிதல்

நேருக்கு வருதல் - இணங்கி வருதல்

நேர்கொடு நேரே - வெளிப்படையாக

நேர்ந்து போதல் - சம்பவித்தல்

நொடி சொல்லுதல் - புதுச் செய்தி கூறுதல்,பரிகசித்தல்

நொடித்துப் போதல் - நிலை குன்றுதல், கெட்டுப்போதல்

நொறுக்கித் தள்ளுதல் - நன்ருயடித்தல், பெருஞ் சாமர்த்தியம் காட்டுதல்

நொறுநாட்டியம் - அற்பக் குற்றங்களைக் காணுந்தன்மை

நோட்டம் பார்த்தல் - தகுதியறிதல், விலைமதித்தல்

நோட்டம் பேசுதல்-பிறர் தன் சொல்லுக்கு உடன்படும்படி பேசுதல்

பகுத்துப் பார்த்தல் - செவ்வையாய்ச் சோதித்துப்பார்த்தல்

பக்கஞ் செய்தல் - ஒளி விடுதல்

பக்கடுத்தல் - நொறுங்குதல்

பசையடித்தல்-வழுவழுப்பாகப் பேசுதல்

பச்சைப்பச்சையாய்ப் பேசுதல்-வெளிப்படையாய்ப் பேசுதல்

பஞ்சப் பாட்டு - ஓயாது தன் ஏழைமையைக் கூறுஞ்சொல்

பஞ்சாய்ப்பறத்தல் - மிகு விரைவாய் நடத்தல், நிலைகுலைந் திருத்தல்

படங்கடித்தல்-பொய்யை மெய்போற் பேசுதல்

படாது படுதல் - மிகத் துன்புறுதல்

படாந்தரம் போடுதல் - முழுப் பொய் கூறுதல்

படிக்குப் பாதி - சரிபாதி

படிப்படியாய் - சிறுகச் சிறுக

படியப் பார்த்தல்-விலைகுறைத்தல், பலகைகளை இணைத்தல்

படிய வைத்தல் - ஊன்றுதல், அடங்கச் செய்தல்

படியளத்தல் - சீவனத்துக்குப் படி கொடுத்தல்

படுகிடை - தன் எண்ணம் நிறைவேறப் பிடிவாதமாகப் படுத்திருக்கை, நோய் மிகுதியால் எழுந்திருக்க முடியாத நிலை

படுக்கவைத்தல் - தோற்கடித்தல், அழித்தல்

படுநீலம் பற்ற வைத்தல் - குற்றத்தை இட்டுக் கட்டிச் சொல்லுதல்

படைத்து மொழிதல்-ஒன்றனை ஏறிட்டுச் சொல்லுதல்

பட்டுத் தரித்தல்-துன்பத்தைப் பொறுத்தல்

பட்டுத் தேறுதல் (தெளிதல்) - அனுபவத்தினாலறிதல்

பட்டுப் படிதல் - கட்டளைக்கு உட்படுதல்

பட்டுப்பட்டாவளி - பட்டு முதலிய விலையுயர்ந்த ஆடை வகைகள்

பட்டுப் பணிதல்-அனுபவத்தின் மேல் அடக்கமுண்டாதல்

பட்டுப் போதல் - உலர்ந்து போதல், சாதல்

பட்டோலை கொள்ளுதல்-பெரியோர் கூறியதை எழுதுதல்

பட்டோலை போடுதல் - அட்டவணை எழுதுதல், மருந்துப் பட்டி எழுதுதல்

பட்டி முறித்தல்-கட்டுக்கடந்து போதல், கூட்டத்தை நீக்குதல்

பணி கொள்ளுதல் - ஏற்றுக் கொள்ளுதல்

பணிக்குச் சொல்லுதல்-குற்றங் கூறுதல்

பணித்துக் கட்டுதல் - தாழக் கட்டுதல்

பண்படுத்துதல் - செம்மைப் படுத்துதல், சீர்திருத்தல்

பண்பட்டவன் - கல்வி யறிவும் அனுபவமு முள்ளவன்

பண்விடுதல் - நிலைகுலைதல்

பதம் பார்த்தல்-சோதனை செய்தல், சுவையறிதல்

பதனிடுதல் - தோல் முதலியவற்றை மெதுவாக்குதல்

பதி போடுதல் - பதுங்குதல், நாற்று நடுதல்

பதிவு வைத்தல்-கணக்கில் பதிதல், வாடிக்கை வைத்தல்

பத்தி பாய்தல் - ஒளி வீசுதல், பிரதிபலித்தல்

பத்தும் பத்தாக - முழுமையாக

பத்தை கட்டுதல் - குற்றத்தை மறைக்க முயலுதல்

பம்பரஞ் சுற்றுதல் - அதிக வேலை வாங்குதல்

பம்பரமாட்டுதல் - அலைக் கழித்தல்

பருவம் பார்த்தல்-ஆழம் பார்த்தல், தக்க சமயம் பார்த்தல்

பரக்கப் பரக்கப் பார்த்தல் - அலமந்து விழித்தல்

பரதேசித் தபால்-ஊர்ப்பேச்சு

பரபரப்பு - விரைவுபடுதல்

பராபரியாய், பராபரிக்கையாய்-கேள்வி மூலமாய்

பல்லாண்டு - நீடு வாழ்க என்னும் வாழ்த்து

பல்லைப் பிடித்துப் பார்த்தல் - ஒருவன் திறனைப் பரிசோதித்தல்

பழம் பாக்கு வாங்குதல் - திருமணம் தீர்மானித்தல்

பழி கிடையாய்க் கிடத்தல் - தன் காரியம் நிறைவேற ஒருவன் வீட்டின்முன் உண்ணாமற் காத்துக்கிடத்தல்

பழி வாங்குதல் - தீமைக்குத் தீமை செய்தல்

பழுக்கப் போடுதல் - ஒரு காரியம் முற்றுதற்குக் காத்திருத்தல்

பள்ளிக்கணக்கு - பள்ளிக்கூடப் படிப்பு

பற்காட்டுதல் - சிரித்தல், பல்லைக்காட்டிக் கெஞ்சுதல்



பற்றவைத்தல்-பகை மூட்டுதல்

பாக்களவு - சிற்றளவு

பாக்கி சாக்கி - மிச்சம்

பாக்குக் கடிக்கு நேரம் - மிகக் குறுகிய காலம்

பாக்குப் பிடித்தல்-பிறனுக்குத் தீங்குண்டாகும்படி சூழ்ச்சி செய்தல், குறைத்துவிடுதல்

பாக்கு வைத்தல் - தாம்பூலம் வைத்து மணத்துக்கு அழைத்தல்

பாடு படுதல் - மிக வுழைத்தல்

பாடு பழக்கம் - காரியமில்லாத பேச்சு

பாடு பறப்பு - கவலை

பாடு பார்த்தல் - தன் காரியம் கவனித்தல்

பாட்டில் விழுதல் - காலஞ் செல்ல விடுதல்

பாட்டு வாங்குதல்-வசவு பெறுதல், திட்டுப் பெறுதல்

பாணி மாறிக் கொட்டுதல் - தாளம் மாறிக் கொட்டுதல், முன்னிருந்த நிலைக்கு மாறுபடுதல்

பாய்ச்சல் காட்டுதல் - ஏய்த்தல்

பார தூரம் - பெருந்தூரம், முதன்மை, ஆழ்ந்த முன் யோசனை

பாரி போதல் - நள்ளிரவில் சுற்றுக் காவல் செய்தல்

பால் பொழிதல் - செழிப்பாயிருத்தல்

பாழ்க் கிறைத்தல் - வீணாகக் காரியஞ் செய்தல்

பாறு பாறாக்குதல் - சிதைத்தல்

பான்மாறுதல் - பால்குடி மறத்தல் பின் வாங்குதல்

பிகு பண்ணுதல் - தன்னை அருமைப்படுத்திக் கொள்ளுதல்

பிடுக்கல் பிடுங்கல், பிச்சுப் பிடுங்கல் - தொந்தரை

பிசுபிசுத்தவன்-உலோபி, மந்தன்

பிஞ்சிற்பழுத்தல்-இளமையிலே முதிர்வடைதல், இளமையில் அறிவு பெருகுதல்

பிடித்துக் கொள்ளுதல்-சுளுக்குதல்

பிடித்த பிடி - கையினாற் கொண்டபிடி, பிடிவாதமான கொள்கை

பித்துப் பிடித்தல - பைத்தியமாதல்

பிட்டுக் காட்டுதல்-கூறுபடுத்தி விளக்கிச் சொல்லுதல்

பித்தலாட்டம் - ஒன்றை மற்றொன்றாகக் காட்டி வஞ்சிக்கை

பிரியக்கடை பண்ணுதல்-தன்னுடையதை அருமைப் பண்டமாக்கிக் கூறுதல்

பிரியாவிடை - உள்ளம் பிரியாதே விடை பெறுகை

பிறக்கடி யிடுதல் - நிலை கெட்டோடுதல்

பின்வாங்குதல் - பின் போதல், ஒப்பந்தத்தினின்றும் நெகிழ்தல்

புண்படுத்துதல் - மனம் நோவச் செய்தல்

புத்தப் புதிய, புத்தம் புதிய-மிகப் புதிய

புரட்டியடித்தல் - உண்மையை மறுத்தல்

புரட்டுருட்டு - மாறாட்டமாகப் பேசுகை, தந்திரச் செயல்

புரிதிரித்தல் - கெடுக்க வழி தேடுதல்

புரிமுறுக்குதல்-கோட் சொல்லுதல்

புரியைக்கட்டியிழுத்தல் - துன்பப்படுத்துதல்
புருவநெறித்தல் - சினத்தால் புருவங்களை வளைத்தல்
புலம்பிடித்தல் - துப்புக் கண்டு பிடித்தல்
புலம் விசாரித்தல்-உளவறிதல்
புல்லரித்தல் - மயிர்க்கூச்செறிதல்
புழுகுணிக் கறுப்பன் - வெறும் பொய்யன்
புளிக்கரைத்தல்-கவலைப்படுதல்
புளிப்புக் காட்டுதல் - பயமுறுத்துதல்
புளிப்புத் தட்டுதல் - அருவருத்துப் பேசுதல்
புளிப்புவிடுதல் - பற்று விட்டுப் போதல்
புள்ளிக்காரன் - கணக்கன், பெயர் சொல்லாது குறிப்பிடப்பட்டவன்
புறக்கொடுத்தல் - தோற்றோடுதல், போகவிடுதல்
புறங்காணுதல் - முறியடித்தல்
புறங்கை நக்குதல் - வறுமையாகுதல்
புறச்சுவர் தீற்றுதல் - உறவினரைப் பாதுகாவாமல் பிறருக்கு விருந்து செய்தல், புறத்தே ஒழுங்கானவர் போல் நடித்தல்
புறமறிப் பார்த்தல் - நன்கு ஆராய்தல்
பூசி மெழுகுதல் - குற்றத்தை மறைக்கப் பார்த்தல்
பூச்சிகாட்டுதல் - அச்சங்காட்டுதல்
பூச்சிபிடித்தல் - வேண்டாத விடத்து மிகுந்த கருத்தோடு காரியஞ் செய்தல்
பூட்டழித்தல்-கட்டுக்குலைத்தல்
பூட்டுப்போடுதல் - பேசவொட்டாது தடைசெய்தல்
பூண்கட்டுதல்-பலப்படுத்துதல்
பூத்துப்போதல் - நீறுபட்டர்தல், கண்பார்வை மங்குதல்
பூராயமிடுதல் - நுணுகி ஆராய்தல்
பெயரப் பெயர-மீண்டும் மீண்டும்
பெயர்த்து எழுதுதல் - படியெடுத்தல், மொழிபெயர்த்தல்
பெயர் பொறித்தல் - புகழை நிலைநாட்டுதல்
பெருக்கெடுத்தல் - வெள்ளம் மிகுதியாதல்
பெருநிலை நிற்றல் - செய்து முடித்தல்
பெரும்பொன் படுதல் - தோற்றப் பொலிவுண்டாதல்
பெரும்போக்கு - பெருந்தன்மை, சாவு
பெருமாள் கோவில் மாடு - உடம்பு கொழுத்தவன்
பேசாத பேச்சு - தகுதியற்ற சொல்
பேச்சுக் கொடுத்தல்-அருமறையறிய வார்த்தை யாடுதல்
பேச்சு வளர்தல் - வாய்ச் சண்டை மிகுதல்
பேச்சு மூச்சில்லாமை—அமைதி அடங்கியிருக்கை
பேதிக்குக் கொடுத்தல் - அச்சமுண்டாக்குதல
பைம்மறித்தல் - உட்புறத்தை வெளிப்புறமாக்குதல், பையின் வாயைக் கட்டுதல்
பையப்பைய — மெல்லமெல்ல
பொங்கல் வைத்தல்-அழித்தல்
பொடிவைத்தல் - தந்திரமாய்ப் பேசுதல், கோட்சொல்லுதல்



பொட்டுக் குலைதல் - மதிப்பிழத்தல்
பொட்டுப்பொடி - சிறுபண்டம்
பொதி யவிழ்த்தல் - தன் வரலாறு விரித்தல்
பொதுவிலே விடுதல் - பொருளைப் பாதுகாவாது விடுதல்
பொத்தலடைத்தல் - குற்றத்தை மறைத்தல்
பொருட்படுத்தல் - மதிப்பிடுதல்
பொழிப்புப் பொழிப்பாய்ப் பேசுதல் - வசைப்பொருள் உள்ளடங்கப் பேசுதல், சுருங்கக் கூறுதல்
பொழுது போக்குதல் - சோம்பிக்கழித்தல், காலங்கழித்தல்
போகப்போக - காலம் செல்லச் செல்ல
போக்கிரி சாக்கிரி - கதியற்றவன்
போக்குக் காட்டுதல் - வழிகாட்டுதல், சாக்குச் சொல்லுதல்
போட்டடைத்தல் - திணித்தல்
போட்டு வைத்தல் - மீத்து வைத்தல்
போதாக்காலம் - கேடுகாலம்
போதாக் குறைக்கு - உள்ளது போதாதென்று
போதுபோக்கு - காலங்கழிக்கை
போனபோக்கு - மனஞ்சென்ற வழி, இழிவுநிலை
மகுடஞ் சூழ்தல் - கண்ணொளி மங்குதல், இறுமாந்திருத்தல்
மடக்கக் கூறுதல் - திரும்பக் கூறுதல்
மடங்கடித்தல் - தோற்கச் செய்தல்
மட்டந் தட்டுதல் - செருக்கடக்குதல்
மட்டம் போடுதல் - வேண்டுமென்று வேலைக்கு வாராதிருத்தல்
மடையன் சாம்பிராணி - அறிவீனன்
மட்டுமரியாதை - தகுதிக்கேற்ற மரியாதை
மட்டை யடித்தல் - வறுமையால் வருந்துதல், கேலிபண்ணுதல்
மட்டைவைத்துக் கட்டுதல் - ஒருவன் குறைவைத் தாங்கிப் பேசுதல்
மடையடைத்தல் - தீர்மானமான விடை சொல்லுதல்
மணிக்கணக்கு - கடிகாரப் படியுள்ள ஒழுங்கு
மண்டைக்கருவம்-மிகுசெருக்கு
மத்திடுதல் - கடைதல்
மல்லுக்கட்டுதல் - கட்டாயப் படுத்துதல்
மழை வறங் கூர்தல் - மழை பெய்யா தொழிதல்
மனப்பால் குடித்தல் - கைகூடாதவற்றைப்பற்றி நெடுக எண்ணி அகமகிழ்தல்
மனம்போன போக்கு - சிந்தை சென்ற வழியே செல்லுகை
மன்றாடுதல் - குறையிரந்து வேண்டுதல்
மாட்டுக்காரப் பயல் - பயனற்றவன்
மாட்டுவித்தல் - அறியச் செய்தல், சேர்த்து வைத்தல்
மிகுத்துச் சொல்லுதல் - அழுத்திக் கூறுகை, விதந்து கூறுகை
மீக்கூர்தல் - அதிகமாதல்
மூகங்கருகுதல் - சினத்தால் முகங்கன்றுதல்

முகங்கவிழ்தல் - நாண முதலிய வற்றால் தலை குனிதல்
முகங் காணுதல் - கட்டி உடை வதற்கு முன் வாய்வைத்தல்
முகங்கொடுத்தல் - செவிசாய்த்தல், செல்லங் கொடுத்தல்
முகமுகமாய் - நேருக்குநேராய்
முகமுறிதல் - தாட்சணியமறுதல், மனநோதல்
முக்கிமுனங்குதல் - மனமின்மை காட்டி முணுமுணுத்தல், மிகத் துன்புறுதல்
முட்டிக் கொள்ளுதல் - பெரு முயற்சி எடுத்தல்
முறைத்துப் பார்த்தல் - ஏற விழித்து நோக்குதல்
முன்னுக்கு வருதல் - வளர்ச்சி யடைதல், உயர்நிலையடைதல்
மூச்சுக்காட்டுதல் - ஆளரவஞ் செய்தல்
மூக்கில் வேர்த்தல் - முன்னடையாளந் தெரிதல்
மூக்கைச் சொறிதல் - எளிமை காட்டுதல்
மூச்சுப் பிடித்தல் - தீவிரமாக முயலுதல்
மூச்சுப்பேச்சு - உயிரிருக்குஞ் சாடை
மூடி வைத்தல் - மறைத்து வைத்தல்
மூரன் முறுவல் - புன்சிரிப்பு
மூலைக்குமூலை - சிதறுபட
மெய்ம்மறத்தல் - தன்னை மறத்தல்
மெனக்கெடுதல் - பயனின்றிக் கழிதல்
மேல்வரிச்சட்டம் - முன்மாதிரியாயமைந்தது
மேல் விழுதல - வலியப் புகுதல், ஊக்கத்துடன் காரியத்தில் முந்துதல்

மேற்போட்டுக் கொள்ளுதல் - பிறனுக்காகப் பிணையேற்றல்
மொட்டையடித்தல் - முழுதுங் கொள்ளையடித்தல்
மொங்கான்வைத்தல் - ஏமாற்றுதல்
வகை செய்தல் - ஏற்பாடு செய்தல், வழிசெய்தல்
வகைதொகை - விவரம்
வடக்கிருத்தல் - உயிர்துறக்குந் துணிவுடன் வடக்கு நோக்கி உண்ணாதிருத்தல்
வணங்காமுடி மன்னன் - ஒருவருக்கும் பணியாதவன்
வத்திவைத்தல் - சண்டை மூட்டுதல், கோட் சொல்லுதல்
வம்பளத்தல் - அவதூறு பேசுதல்
வம்புதும்பு - வீண் பழிச்சொல்
வயிற்றிலடித்தல் - சீவனத்தைக் கெடுத்தல்
வயிற்றெரிச்சல் - பொறாமை
வரலாற்று முறைமை - பாம்பரையாகக் கையாளப்படும் அடிப்பட்ட வழக்கு
வரன்முறை - அடிப்பட வந்த முறை வரலாறு
வரையறை - எல்லை, அளவு, அடக்க வொடுக்கம், கண்டிப்பு, திட்டம், முடிவு
வலக்கையடித்தல் - உறுதி கூறுதல்
வலைவீசுதல் - வசப்படுத்த முயலுதல்
வல்லடி வம்பன் - பலாத்காரத்தால் காரியத்தை முடித்துக் கொள்வோன்
வல்லாள கண்டன் - போராற்றலுள்ளவன், மிக்க துணிவுள்ளவன்
வழிபார்த்தல் - உபாயந்தேடுதல்



வழிவழி - பரம்பரையாய்
வாக்கு வடிவு - வடிவழகு
வாக்கு வல்லபம் - பேச்சு வன்மை
வாட்ட சாட்டம் - தோற்றப் பொலிவு
'வாய்க் கொழுப்பு - மதியாது பேசுகை
வாய்குளிரப் பேசுதல் - மேலுக்கு இனிமையாகப் பேசுதல்
வாய் போக்குதல் - எளிதில் வாக்குக் கொடுத்தல்
வாய்ப்பக் காட்டுதல் - விளங்க உணர்த்துதல்
வாய்ப்பூட்டு - பேசாமற்றடுக்கை
வாயடித்தல் - மருட்டிப் பேசுதல்
வாயில் மண் போடுதல் - கேடு விளைவித்தல்
வாயிலே போடுதல் - எது பேசினும் பேசவொட்டாது தடைசெய்தல், அபகரித்தல்
வாயைக்கட்டுதல், வயிற்றைக் கட்டுதல் - சிக்கனமாக இருத்தல்
வாய் வைத்தல் - சிறிது பயிலுதல், தலையிடுதல்
வாரம்பாடுதல் - பின் பாட்டுப் பாடுதல்
வாரி யிறைத்தல் - வீணுக்குதல்
வால் முளைத்தல் - சேட்டை செய்கை
வாலாட்டுதல் - சேட்டைசெய்தல்
வால்முறுக்குதல் - தூண்டிவிடுதல்
வாழையடிவாழை - இடையறாது தொடர்ந்துவரும் சந்தானம்
வானம் பறித்தல் - அஸ்திவாரம் தோண்டுதல்
வானம்பார்த்த பூமி - பாசன வழியில்லாது மழையால் விளையும் பூமி

விடியா மூஞ்சி - தொடர்ந்து வரும் துரதிஷ்டமுள்ளவன்
விடியா வழக்கு - ஒரு பொழுதும் முடிவுபெறாத வழக்கு
விடுத்து விடுத்து - அடிக்கடி
விட்டுக்கொடுத்தல் - இணக்கங் காட்டுதல்
விதிவிலக்கு - முறையினின்றும் நீக்குகை
விரல்வைத்தல் - குறும்பு செய்தல்
விருப்பு வெறுப்பு - வேண்டுதல் வேண்டாமை
விழத்தட்டுதல் - கீழே விழும்படி தள்ளுதல்
விழலுக் கிறைத்தல் - வீண் பாடுபடுதல்
விழிகண்குருடு - புறத்தே விழியில் மாறுபாடின்றிக் கண் தெரியாமை
விழிபிதுங்குதல் - வேலைநெருக்கடியால் வருந்துதல்
விளக்கங் காணுதல் - ஆராய்ந்தறிதல்
விளக்கேற்றி வைத்தல் - நிலைநிறுத்துதல், வாழவைத்தல்
வீடும் விளக்குமாய் வைத்தல் - ஒருவனை வாழவைத்தல்
வீட்டோடுங் கூட்டோடும் - வீடு முழுதும்
வீரம்பேசுதல் - தன் வல்லமையைத் தானேபுகழ்தல், ஆண்மைத்திறங் கூறுதல்
வீற்றுவீற்றாக - வெவ்வேறாக
வெட்டிப் பேசுதல் - கண்டித்துப் பேசுதல்
வெட்டிப்பேச்சு - வீண்பேச்சு
வெளிகொடு வெளியே - பகிரங்கமாய்
வெளிச்சங்காட்டுதல் - வெளிக்கு ஆடம்பரமாய்த் தோன்றுதல்

வெளுத்து வாங்குதல் - மிக நன்றாகச் செய்தல்
வெள்ளையப்பன் - வெள்ளி நாணயம்
வெள்ளையுஞ்சள்ளையும் - வெண்மையான உடை
வெள்ளை வேட்டிக்காரன் - மாசற்ற ஆடையணிந்து சோம்பேறியாக இருப்பவன்
வெறுவாய்க்கிலை கெட்டவன் - ஒன்றுமில்லாத வறிஞன்
வெற்றிலைபாக்குக் கொடுத்தல் - மரியாதை செய்தல்
வேண்டாவெறுப்பு - விருப்பில்லாமை
வேலியழித்தல் - வரம்பு கடத்தல்
வேலை சாய்த்தல் - தொழிலை முடித்தல், அழித்தல், கொலை புரிதல்
வேலையினக்கெட்டவன் - வேலையின்றிச் சோம்பியிருப்பவன்
வேலைமேற் போதல் - தன் வேலையைக் கவனிக்கப் போதல்
வேளாவேளை - சிற்சில சமயத்தில், உரிய காலத்தில்
வேளைப் பிசகு - தீயகாலம்
வேறு செய்தல் - பகை விளைத்தல்
வேறு நினைத்தல் - மாறுபாடாக நினைத்தல்
வேன் காணுதல் - அளவில் மிகுதியாயிருத்தல்

# இணைமொழி அகரவரிசை

அகமும்புறமும்
அகலாமல் அணுகாமல்
அடியும் நுனியும்
அடுப்பும் துடுப்பும்
அருமை பெருமை
அல்லும் பகலும்
அறம் மறம்
அன்றிலும் பேடும்
அன்றும் இன்றும்
ஆக்கமும் கேடும்
ஆங்காலம் போங்காலம்
ஆடல் பாடல்
ஆண்டான் அடிமை
ஆய்ந்து ஓய்ந்து
இகழ் புகழ்
இம்மை மறுமை
இயலும் செயலும்
இயற்கையும் செயற்கையும்
இளைத்துக் களைத்து
இறங்குபொழுது ஏறுபொழுது
இன்ப துன்பம்
ஈடும் எடுப்பும்
உடை நடை
உயர்வு தாழ்வு
உயிரும் உடலும்
உருட்டும் புரட்டும்
உருண்டு திரண்டு
உருவும் திருவும்
உள்ளது உரியது
உள்ளதும் இல்லதும்
உள்ளும் புறமும்
உற்றார் உறவினர்
ஊரும் பேரும்
எடுப்பாரும் பிடிப்பாரும்
எண்ணும் எழுத்தும்
எருக்குங் குருக்கும்
எலும்பும் தோலும்
ஏழை எளியவர்
ஏற்றடி இறக்கடி
ஒட்டி உலர்ந்து
ஒப்பாரும் மிக்காரும்
ஒப்பு உயர்வு
கட்டை நெட்டை
கண்டது கேட்டது
கண்டுமுட்டு கேட்டுமுட்டு
கண்ணீரும் கம்பலையும்
கப்பும் கவரும்
கல்லும் கரம்பும்
கல்வி கேள்வி
கற்பும் பொற்பும்
கனவோ நனவோ
காவலரும் ஏவலரும்
காவலரும் பாவலரும்
காலை மாலை
கீழும் மேலும்
குடியும் தடியும்
குணம் குறி
குலமும் குணமும்
குறைவு நிறைவு
குற்றுயிரும் கொலையுயிரும்
கேளும் கிளையும்
கையும் மெய்யும்
கோட்டு முழக்கு
கொண்டு கூட்டு
கொத்தடிமை குடியடிமை
கொப்பும் குழையும்
கொலையும் புலையும்
சட்டி பானை
சந்தி சதுக்கம்
சாக்குப் போக்கு
சாவா மூவா
சீராட்டிப் பாராட்டி
சீரும் சிறப்பும்
சீறிச் சினந்து
சுற்றும் முற்றும்
சொல்லும் பொருளும்
ஞாயிறுந் திங்களும்
தடுத்து மடுத்து

தடை விடை
தப்பும் தவறும்
தாயும் சேயும்
தும்பு தூசு
தோட்டம் துரவு
தோலும் எலும்பும்
நகமும் சதையும்
நகை நட்டு
நயமும் பயமும்
நரை திரை
நலம் பொலம்
நல்லார் பொல்லார்
நன்மை தீமை
நாடு நகர்
நாயும் பேயும்
நாளுங் கிழமையும்
நாளும் கோளும்
நிரந்து கலந்து
நுங்கும் நுரையும்
நைந்து பிய்ந்து
நொண்டி சண்டி
நோய் நொம்பலம்
நோவு நொடி
படியாதார் பண்டிதர்
பட்டி தொட்டி
பண்ணும் இசையும்
பயிர் பச்சை
பருந்தும் நிழலும்
பழக்க வழக்கம்
பாலும் தேனும்
பாவமும் பழியும்
பேரும் புகழும்
பொய்யும் புலையும்
பொய்யும் புனைசுருட்டும்
பொய்யும் வழுவும்
போக்கு புகல்
போக்கும் வரவும்
போற்றிப் புகழ்ந்து
மணியும் ஒளியும்
மண்ணும் விண்ணும்
மண் மனை
மந்திர தந்திரம்
மப்பு மந்தாரம்
மயக்கம் தியக்கம்
மலரும் மணமும்
மலைக்கும் மடுவுக்கும்
முட்டி மோதி
முத்தி மோந்து
முற்ற முடிய
மேடு பள்ளம்
யாழும் குழலும்
வற்றி வறண்டு
வாடி வதங்கி
வாய்க்கால் வரப்பு
வாழ்வு தாழ்வு
வானகமும் வையகமும்
விதி விலக்கு
விருப்பு வெறுப்பு
வினா விடை
வீடும் விளக்கும்
வேரும் தூரும்

---

## ஒலிக்குறிப்பாதிய தொடரகரவரிசை

கக்கக்
கச்சுப்பிச்சு
கசுமுசு
கடகட
கடுகடு
கணகண
கதகத
கபகப
கமகம
கரகர
கரட்டுக்கரட்டு
கலகல
கழுக்குமொழுக்கு
களகள
கறகற
கறுகறு
கன்னங்கரேல்
காகூ
காச்சுப்பீச்சு
காச்சுமூச்சு
கிச்கிச்
கிடுகிடு
கிணுகிணு
கிணுக்குக்கிணுக்கு
கிண்கிண்
கிலுகிலு
கிளுகிளு
கிறிச்சுக்கிறிச்சு
கிறுகிறு
கீச்சுக்கீச்சு
கிர்கிர்
குணுகுணு
குதுகுது
குப்குப்
குமுகுமு
குய்யோமுறையோ
குலுகுலு
குவாக்குவாக்
குழகுழ
குழக்குக்குழக்கு
குளகுள
கெச்சுக்கெச்சு
கெதங்கெதம்
கெத்துக்கெத்து
கொடுகொடு
கொளகொள
சடக்குச்சடக்கு
சடசட
சடுகுடு
சரட்டுச்சரட்டு
சலசல
சலுக்குப்பிலுக்கு
சிடுசிடு
சளக்குப்புளக்கு
சளசள
சளபுள
சள்ளுப்பிள்ளு
சிணுக்குச்சிணுக்கு
சிலீர்சிலீர்
சிளுசிளு
சிளுபுளு
சீத்துப்பூத்து
சீறுசீறு
சீறுபூறு
சுடுசுடு
சுரசுர
சுருசுரு
சுளுச்சுள்ளு
செக்கச்செவேல்
டக்டக்
டபடப
டமடம
டாக்குடீக்கு
தகதக
தக்கடாபிக்கடா
தக்காபிக்கா
தக்குப்புக்கு
தடதட
தத்தக்கபித்தக்க
தத்தபித்த
தபதப
தமதம
தறதற
தாட்டுப்பூட்டு
தாநதோம்
திக்குத்திக்கு
திடீர்திடீர்
திடுக்குத்திடுக்கு
திடுதிடு
திணதிண்
திமிதிமி
துறுதுறு
தொணதொண
தொப்புத்தொப்பு
தொளதொள
நச்சுநச்சு
நசநச
நருநரு
நருபிரு
நளுநொளு
நறநற
நறுக்குப்புறுக்கு
நெருநொரு
நொணநொண
நொதுக்குநொதுக்கு
நொளுநொளு
நொறுநொறு
பகபக

பசபச
பச்சைப்பசேல்
படபட
பரபர
பளபள
பளாபளா
பளிச்சுப்பளிச்சு
பறபற
பிலபில
பிலிபிலி
பிறபிற
புலபுல
பூத்துப்பூத்து
பூர்பூர்
போக்குப்பொக்கு
பொசுபொசு
பொடுபொடு
பொத்துப்பொத்து
பொதுக்குப்பொதுக்கு
பொதுபொது
பொரிபொரி

பொருபொரு
பொலுபொலு
மடமட
மடக்குமடக்கு
மதமத
மலமல
மழமழ
மளமள
மிடுமிடு
மிணுமிணு
மினுக்குமினுக்கு
முசுமுசு
முணமுண
முரமுர
மூசுமூசு
மோகுமொகு
மொச்சுமொச்சு
மொடுமொடு
மொரமொர
மொலுமொலு
மொழுமொழு
மொறமொற

லவக்குலவக்கு
லோடலொட
லொடுக்குலொடுக்கு
லவாலவா
வழவழ
வழுவழு
வளவள
வறவற
விண்விண்
விதுவிது
விதுக்குவிதுக்கு
விருவிரு
விறுவிறு
வீர்வீர்
வேச்சுவெச்சு
வெட்டுவெட்டு
வெடுக்குவெடுக்கு
வெடுவெடு
வெதுவெது
வெலவெல
வெள்ளைவெளேர்
வெளுவெளு

# தமிழ் வளர்ச்சி நூல்கள்

| | | |
|---|---|---|
| அழைப்பிதழ் எழுது முறை | அணா | 2 |
| வடசொல் தமிழ் அகரவரிசைச் சுருக்கம் | ,, | 3 |
| பிழை நீக்கி எழுதுமுறை | ,, | 3 |
| மக்கட்பெய ரகரவரிசை | ,, | 3 |
| பழமொழி யகரவரிசை | ,, | 3 |
| உவமை யகரவரிசை | ,, | 3 |
| மரபுத்தொட ரகரவரிசை | ,, | 3 |

தமிழ்ப் பாதுகாப்பு நூற்றிரட்டு

மேற்கண்ட 7 நூல்களும் சேர்ந்தது.

வழுவழுப்பான காகிதம்;

கலிக்காக் கட்டடம் ரூ. 1—8—0

---

**தமிழ்ப் பாதுகாப்புக் கழகம்,**
7, பவழக்காரத் தெரு, சென்னை-1.

http :\\ www. thamizham. net

அப்பர் அச்சகம், 2/140, பிராட்வே, சென்னை-1.